Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, JUNE 28, 2023

புதன்கிழமை ஜூன் 28, 2023 | ஒளி: 09 கதிர்: 028 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு★ | FREE

# அஸ்வெசும முறையீடுகள் 2 இலட்சத்தை நெருங்கின

**பொது மக்கள், வார நாள்களில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயற்படும் 1924 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்**



'அஸ்வெசும' நலன்புரி உதவித் திட்டத்தின் பயனாளிகள் பட்டியல் தொடர்பில் இதுவரை 1 இலட்சத்து 90 ஆயிரம் முறையீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதன்படி, இதுவரை 188,794 முறையீடுகளும் 3,304 ஆட்சேபனைகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்கு, பொது மக்கள், வார நாள்களில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை செயற்படும் 1924 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் சேமசிங்க மேலும் தெரிவித்தார். தொடர்ச்சி P2



விசேட நிபுணர்களின் ஓய்வு வயதெல்லை

## 63 வயது

### சட்டமா அதிபரால் நீதிமன்றுக்கு அறிவிப்பு

விசேட வைத்தியர் நிபுணர்களின் ஓய்வுபெறும் வயதை 63 ஆக உயர்த்துவதற்கு சுகாதார அதிகாரிகள் தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு, செவ்வாய்க்கிழமை (27) அறிவித்தார். தொடர்ச்சி P2

## அஸ்வெசும குறித்து நாமல் அதிருப்தி

### அரசாங்க எம்.பிக்களும் அதிருப்தி



அரசாங்கத்தின் புதிய சமூக நலத் திட்டமான அஸ்வெசும தொடர்பில் எழுந்துள்ள நெருக்கடி தொடர்பில் தனது அதிருப்தியை வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, அஸ்வெசும ஏழைகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் எனவும் அது ஒரு பிரச்சினையாக மாறக்கூடாது என்றும் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## ஆளும் எம்.பிக்களுடன் இன்று விசேட கூட்டம்

### குழுக்கூட்டம் வெள்ளிவரை ஒத்திவைப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில், இன்றையதினம் (28) பிற்பகல் 5 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் விசேட கூட்டம் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, செவ்வாய்க்கிழமை (27) நடைபெறவிருந்த பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுக் கூட்டம் வெள்ளிக்கிழமை (30) வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

## சனத் நிஷாந்த விவகாரம்: ஜூலை 13இல் பரிசீலனை



நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சனத் நிஷாந்தவுக்கு எதிரான வழக்கை, ஜூலை 13ஆம் திகதி பரிசீலிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம், செவ்வாய்க்கிழமை (27) தீர்மானித்தது. தொடர்ச்சி P2

சீனாவில் உள்ள அமைச்சர் அலி சப்ரி

## உலக பொருளாதார மன்ற பேச்சில் பங்கேற்கிறார்



சீனாவின் டியான்ஜின் நகரில் இன்று (28) இடம்பெறவுள்ள உலக பொருளாதார மன்றத்தில் உலகளாவிய கடன் வெடிப்பு குறித்த கலந்துரையாடலில் வெளிவிவகாரஅமைச்சர் அலி சப்ரி கலந்துகொள்ள உள்ளார். அத்துடன், அமைச்சர் அலி சப்ரி தற்போது டியான்ஜினில் நடைபெறும் உலக பொருளாதார மாநாட்டில் பங்கேற்கும் குழுவுக்குத் தலைமை தாங்குகிறார். தொடர்ச்சி P2

தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல்

## அதிகார சபையில் பாரிய ஊழல் மோசடிகள்

தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் பாரிய ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும், அதன் பணிப்பாளர் சபை பூர்த்தியற்று காணப்படுவதாகவும், அங்கு நிபுணர்களின் பற்றாக்குறை நிலவுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிறப்பிக்கப்படும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தாமை, தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியும் மதிப்பீட்டுக் குழு மற்றும் நிபுணர் குழுக்களில் பங்கேற்பது போன்ற பல முறைகேடுகள் இடம்பெறுவதாகவும், இது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சரும் செயலாளரும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2



இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான

## சுதந்திர வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை வெற்றி

ஆசியான் நாடுகளுக்கு விசேட கவனம் செலுத்தி பிரதான மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரங்களுடன் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வைக்கு அமைவாக, இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தை கொழும்பில் ஆரம்பமானது. தொடர்ச்சி P2

சின்னத் தேர்தல் விவகாரம்:

## சட்டமா அதிபரின் அடிப்படை ஆட்சேபனை நிராகரிப்பு

தேசிய மக்கள் சக்தி மற்றும் பஃப்ரல் ஆகியன சமர்ப்பித்த இரண்டு அடிப்படை உரிமை மனுக்களை விசாரணையின்றி நிராகரிக்குமாறு சட்டமா அதிபர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனைகளை உயர்நீதிமன்றம், செவ்வாய்க்கிழமை (27) நிராகரித்தது.

மார்ச் 09 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்டமிட்டபடி நடத்தாததன் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பை கோரியே குறித்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அந்த மனுக்கள், புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ மற்றும் காமினி அமரசேகர ஆகிய ஐவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்தத் தீர்மானம் அறிவிக்கப்பட்டது. தொடர்ச்சி P2



ரணில் விக்கிரமசிங்கவின் வீடு

## எரிகையில் படமெடுத்த பியத்துக்குப் பிணை

குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் கைது செய்யப்பட்ட சமூக செயற்பாட்டாளர் பியத் நிகேஷலவை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, செவ்வாய்க்கிழமை (27) உத்தரவிட்டார். தொடர்ச்சி P2




500 மில்லியன் டொலர்

## கடனுதவி ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை அனுமதி

உலக வங்கியுடன் 500 மில்லியன் டொலர் கடனுதவிக்கான ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

2023 முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான 2 வருட காலப்பகுதிக்கான அபிவிருத்தி கொள்கை நிதி வழங்கல் திட்டத்தின் கீழ், உலக வங்கியின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றுள்ளது. தொடர்ச்சி P2

சிறுபான்மையினருக்காக குரல் கொடுக்கும் சிங்களவர்கள்

# தென்னிலங்கையில் துரோகிகளாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள்

**ஏ.எச்.ஏ. ஹூஸைன்**

நடுநிலையான சிங்களவர்கள் சிறுபான்மையினருக்காக குரல் கொடுக்கின்றபோது, அவர்கள் தென்பகுதி சிங்கள மக்களிடையே துரோகிகளாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள் என இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் சமன் செனவிரத்ன தெரிவித்தார்.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையில் கடந்த 23 வருடங்களாகக் கடமையாற்றி,, அந்நிறுவனத்திலிருந்து விலகிச் செல்லும் சமன் செனவிரத்னவின் அர்ப்பணிப்புடனான சமாதான செயற்பாடுகளைப் பாராட்டி பிரியாவிடை அளிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட சர்வோதய மத்திய பயிற்சி நிலையத்தில் திங்களன்று (26) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையின் இணைப்பாளர் இராசையா மனோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தேசிய சமாதானப் பேரவையின் இணைப்பாளர்களான ரஷிகா செனவிரத்ன, பாஸ்தேவன், உட்பட அனைத்து சமூகங்களையும் சேர்ந்த சமயப் பெரியார்கள் அதன் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர். தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# அஸ்வெசும முறையீடுகள் 2 இலட்சத்தை நெருங்கின

'அஸ்வெசும' சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மக்கள் மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை நாடளாவிய ரீதியில் உள்ள பிரதேச செயலகங்களில் தனிப்பட்ட முறையில் கையளிப்பதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக ஜூன் 25 அன்று இராஜாங்க அமைச்சர் அறிவித்தார்.

இதேவேளை, பொருளாதார ஸ்தீரத்தன்மை தேவைப்படும் நபர்களுக்கு உதவுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட அஸ்வெசும திட்டத்திற்கு அரசியல் சாயம் பூசி தமது அரசியல் தேவைகளை நிறைவேற்ற சில தரப்பினரின் முயற்சி மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது.

எவ்வாறாயினும், தகுதியானவர்களை தெரிவு செய்வதில் குறைபாடுகள் இருப்பின் அது உடனடியாக நிவர்த்தி செய்யப்படும் எனவும், இது தொடர்பில் எதிர்வரும் வாரங்களில் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் சகல தரப்பினருடனும் கலந்துரையாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# 63 வயது

தமது கட்டாய ஓய்வு வயதை 60 ஆகக் குறைக்கும் 17.10.2022 திகதியிடப்பட்ட அமைச்சரவையின் தீர்மானத்தை எதிர்த்து 176 விசேட வைத்திய நிபுணர்களால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு செவ்வாய்க்கிழமை (27) எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மனுதாரர்களின் ஓய்வு வயதை 63 ஆக உயர்த்துவது குறித்து சுகாதார அமைச்சின் செயலாளரிடம் இருந்து தனக்கு அறிவுறுத்தல் கிடைத்துள்ளதாகவும், இது குறித்து அமைச்சரவையில் முடிவு எடுக்கப்படும் என்றும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ஜூன் 30 அன்று நகர்த்தல் பத்திரம் மூலம் இந்த விடயத்தை தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று அறிவித்ததையடுத்து, மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, இந்த தீர்மானம் வரவேற்கத்தக்கது என குறிப்பிட்டார்.

எனினும், மனுதாரர்கள் ஜூன் 30 ஆம் திகதிக்குள் ஓய்வு பெற வேண்டிய அபாயம் இருப்பதால், ஜூன் 30 ஆம் திகதி வரை வழக்கை கொண்டுசெல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்துடன், இன்றையதினம் (28) வழக்கை நிர்ணயிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

அதற்மைய இன்று (28) இந்த வழக்கை பரிசீலிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்ததுடன், அனைத்து வகை விசேட வைத்திய நிபுணர்களையும் 63 ஆண்டுகள் வரை சேவையில் நீடிக்க அனுமதிப்பது உத்தேச தீர்வு என்று பதிவு செய்யப்பட்டது.

# எரிகையில் படமெடுத்த பியத்துக்குப் பிணை

அத்துடன், 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 சரீரப் பிணைகளிலும் செல்ல அனுமதித்த நீதவான், சந்தேக நபருக்கு வெளிநாட்டு பயணத்தடை விதித்தும் உத்தரவிட்டார்.

வாக்குமூலமொன்றை பெற்றுக் கொள்வதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு திங்கட்கிழமை (26) அழைக்கப்பட்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்ட அவர், நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (27) ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த வருடம் ஜூலை 09 ஆம் திகதியன்று தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவிவகித்த போது, அவரது இல்லத்துக்கு தீ வைத்தமை மற்றும் சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக அவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரது தனிப்பட்ட இல்லத்துக்கு தீ வைக்கப்பட்ட போது அதனை, சமூக வலைத்தளங்களில் நேரடியாக அஞ்சல் செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் இவர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுதந்திர வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை வெற்றி

கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் திங்கட்கிழமை (26) காலை தொடங்கிய அதன் ஆரம்ப அமர்வில் கருத்துத் தெரிவித்த சர்வதேச வர்த்தக அலுவலகத்தின் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவின் பிரதான பேச்சுவார்த்தையாளர் கே.ஜே. வீரசிங்க, உடன்பாடு காணப்பட்ட காலவரையறையின்படி நடைமுறைப்படுத்தப்படுகின்ற இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து திருப்தி அடைய முடியும் என்று குறிப்பிட்டார்.

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை தாய்லாந்தில் ஒகஸ்ட் 21 முதல் 23, வரை நடைபெறும் என்றும், 2024 மார்ச்சில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்றும் அவர் தெரிவித்தார். 2024ஆம் ஆண்டு பெப்ரவரியில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இறுதிப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக மேலும் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை  தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தை இன்று (28) வரை நடைபெறவுள்ளது.

உலகளாவிய பொருளாதாரத்துடன் இணைவதற்கான இலங்கை அரசாங்கத்தின் நோக்கத்தை தாய்லாந்து பிரதிநிதிகளுக்கு விளக்கிய வீரசிங்க, பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்தில் அங்கம் வகிப்பதற்காக, இலங்கையின் பொருளாதார பிரவேசத்தை முதலில் தெற்காசியாவிலும் பின்னர் அதை கிழக்கு நோக்கியும் விரிவுபடுத்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எதிர்பார்ப்பை தாய்லாந்து தூதுக்குழுவிடம் விளக்கினார்.

# அஸ்வெசும குறித்து நாமல் அதிருப்தி

அஸ்வெசும பிரச்சினையை கையாளும் போது அரசியல் சார்புகளுக்கு அடிபணியாமல், மனிதாபிமான கண்ணோட்டத்தில் பிரச்சினையை பார்க்குமாறு தான் அரசாங்கத்தை கேட்டுக்கொள்வதாகவும் அவர் கூறினார்.

இதற்கிடையில், கடந்த சில நாட்களாக கடும் எதிர்ப்புகளை கிளப்பிய 'அஸ்வெசும' நலத்திட்டம் தொடர்பான விவகாரங்கள் குறித்து பல அரசாங்க எம்பிக்களும் பகிரங்கமாக அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இத்திட்டத்தில் தகுதி இருந்தும் தாங்கள் சேர்க்கப்படவில்லை என்று கூறி சமீப நாட்களாக பல போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் உண்மையாக உள்ளடக்கப்பட வேண்டியவர்கள் இதில் சேர்க்கப்படவில்லை என்றும், தகுதியற்றவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் சில அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# ஆளும் எம்.பிக்களுடன் இன்று விசேட கூட்டம்



சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் வெள்ளிக்கிழமை காலை 09:30 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்த வார இறுதியில் நடைபெறவுள்ள விசேட பாராளுமன்ற அமர்வில் கடன் மறுசீரமைப்பு திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை (30) நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், வார இறுதியில் விசேட அமர்வொன்றை நடத்துவது தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

வார இறுதி நாட்களில் வெளியூர் அல்லது வெளியூர் செல்வதை தவிர்க்குமாறு ஆளும் தரப்பு எம்பிக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சட்டமா அதிபரின் அடிப்படை ஆட்சேபனை நிராகரிப்பு

திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன, சட்டமா அதிபர், தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட சிலர் குறித்த மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட மனுவை, கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹதுன்நெத்தி மற்றும் டொக்டர் நிஹால் ஜயசிங்க ஆகியோர் தாக்கல் செய்துள்ளனர்.

## உலகப் பொருளாதார மன்ற பேச்சில் பங்கேற்கிறார்



'தொழில் முனைவோர்: உலகளாவிய பொருளாதாரத்தின் உந்து சக்தி' என்ற கருப்பொருளைக் கொண்ட இந்த மன்றம், உலகெங்கிலும் உள்ள 90 நாடுகளின் அரசியல் மற்றும் வணிகத் தலைவர்களிடையே உரையாடலுக்கான தளத்தை வழங்குகிறது.

இது பொருளாதார சவால்களில் பிராந்திய மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர் சப்ரி, 'இழந்த தசாப்பத்தை தடுப்பது' என்ற வட்டமேசை மாநாட்டிலும், 'நாளைய பொருளாதாரத்தை எவ்வாறு வலுப்படுத்துவது' என்ற தலைப்பிலான பங்குதாரர் உரையாடலிலும் பங்கேற்க உள்ளார்.

தனது சீன விஜயத்தின் போது, வெளிவிவகார அமைச்சர் சீன வெளிவிவகார அமைச்சர் குயின் கங் மற்றும் ஏனைய உயர்மட்ட பிரமுகர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

பீஜிங்கில் வசிக்கும் இலங்கை சமூகம் மற்றும் தியான்ஜின் பல்கலைக்கழகத்தில் உள்ள இலங்கை மாணவர்களுடன் அமைச்சர் அலி சப்ரி கலந்துரையாடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## அதிகார சபையில் பாரிய ஊழல் மோசடிகள்

அரசாங்க மருந்தாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (27) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைச் சந்தித்து தேசிய ஔடத ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்து தெளிவூட்டினர்.

குறித்த தெளிவுபடுத்தலைத் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார். எமது நாட்டின் ஔடதம் தொடர்பான சட்ட விதிமுறைகள் ஏற்பாடுகளின் பிரகாரம், மருந்துப் பொருட்களை பதிவு செய்வதற்கான முறையான செயல்முறை உள்ளதாகவும், அவசரகால சூழ்நிலையில் செயல்படுத்தப்பட வேண்டிய முறையொன்று இருந்தாலும் அந்த முறைமையை பயன்படுத்தி மருந்துப்பொருட்கள் பதிவு செய்யப்படுவதையும் தவிர்த்து தவறான முறையில் ஔடத அதிகார சபையின் தலைவர் கொள்வனவு செய்திருப்பதாகவும் ,இதன் காரணமாக தரமற்ற மருந்துப்பொருட்களை சந்தைக்கு விநியோகிக்கும் வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவருக்கு இங்கு அறிய கிடைத்தது.

# கடனுதவி ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை அனுமதி

அதற்கமைய, 2023 ஆம் ஆண்டிற்காக 500 மில்லியன் அமெரிக்க டொலருக்கு இணையான விசேட கணக்குரிமை எனப்படும் 371.2 மில்லியன் சிங்கப்பூர் டொலர் நிதியை இரு தவணைகளில் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பான இணக்கப்பாட்டை எட்டுவதற்காக நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

# சனத் நிஷாந்த விவகாரம்: ஜூலை 13இல் பரிசீலனை



மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஏ. மரிக்கார் ஆகியோர் முன்னிலையில் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டன.

அதன்போது இந்த வழக்கு தொடர்பான ஆதாரமாக சமர்ப்பிக்கப்பட்ட சீடிக்களை ஆய்வு செய்வது தொடர்பாக சாட்சிய சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் நோட்டீஸ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம மன்றுக்கு அறிவித்தார்.

மனுக்களை ஜூலை 13ஆம் திகதியன்று மனுக்கள் பரிசீலிக்கப்படும் என்றும் நோட்டீஸ் கிடைக்கப்பெற்றதா என்பதை அன்றைய தினம் எதிர்மனுதாரருக்கு அறிவிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சட்டத்தரணி பியல் சிறிசேன மற்றும் பொலன்னறுவை சட்டத்தரணிகள் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி விஜித குமார ஆகியோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த ஆகியோர் மனுக்களில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

> **சட்டமா அதிபர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த ஆகியோர் மனுக்களில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்**

2022 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 23 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த காலப்பகுதியில், பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய சனத் நிஷாந்த, இலங்கையின் நீதித்துறை தொடர்பாக, குறிப்பாக நீதித்துறை அதிகாரிகள் தொடர்பில் சில கருத்துக்களை வெளியிட்டதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 105(3) சரத்தின் பிரகாரம் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக சனத் நிஷாந்த எம்.பியை தண்டிக்க உத்தரவிடுமாறு மனுதாரர்கள், கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தென்னிலங்கையில் துரோகிகளாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள்

பாராட்டுக்களை ஏற்றுக் கொண்டு பிரியாவிடை நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய சமன் செனவிரத்ன, தென்பகுதி சிங்கள சமூகத்தைச் சேர்ந்த சமாதான செயற்பாட்டாளர்களான நாங்கள் வடக்குக்குச் செல்லும்போது அந்த மக்களும் நீங்கள் எங்களை வந்து பார்த்து விட்டுத்தான் செல்கிறீர்கள் ஆனால் ஒன்றும் செய்யவில்லை என்று எங்கள் மீது குறை காண்கிறார்கள்.

அதேபோல நாங்கள் தென்னிலங்கைக்குச் செல்லும்போது நீங்கள் தமிழ் மக்களையும் எல்ரீரீஈ ஐயும் பற்றி மட்டும்தான் பேசுகிறீர்கள் அதனால் நீங்கள் தென்னிலங்கை சிங்கள மக்களின் துரோகிகள் என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

இரு பக்கங்களிலும் எங்களுக்குப் பாராட்டுக்கள் வரவேற்புக்கள் கிடைக்காத போதிலும் நாங்கள் எங்களது சமாதானத்துக்கான பயணத்தை நிறுத்தவில்லை. அதில் சோர்வடையவுமில்லை என்றார்.

எனவே சமாதான விரும்பிகள் இத்தகைய நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டும். சமாதான செயற்பாட்டில் சவால்கள் அச்சுறுத்தல்கள் பலங்கள் பலவீனங்கள் இருக்கும் அவற்றை பகுப்பாய்வு செய்து கொண்டு சமாதானத்தக்கான பயணத்தைத் தொடர் வேண்டும் என்று மாவட்ட சர்வ மதப் பேரைவயில் இணைந்து சமாதானத்திற்காகப் பயணிக்கவிருக்கின்ற உங்களை நான் கேட்டுக் கொள்கின்றேன்." என்றார்.



# தனியார் வகுப்புகள் நடத்த ஆசிரியர்களுக்குத் தடை

தங்களிடம் கல்விக்கற்கும், மாணவர்களிடம் பணம் வசூலித்து ஆசிரியர்கள் தனியார் வகுப்புகளை நடத்துவதைத் தடை செய்து மத்திய மாகாண கல்விச் செயலாளர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

மேலும், பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு, பணம் வசூலிக்காமல், நல்ல எண்ணத்துடன் மேலதிக வகுப்புகள் நடத்துவதற்கு, எவ்வித தடையும் இல்லை என சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யு. கமகேயின் ஆலோசனைக்கு அமைய இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சமத்துவமான பாடசாலைக் கல்வியை மத்திய மாகாணத்தில் நிறுவும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சுற்றறிக்கையை மீறும் ஆசிரியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், இது தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை பரிசீலித்து சுற்றிவளைப்புகளை மேற்கொள்வதாகவும் மத்திய மாகாண கல்வி செயலாளர் யு.பி. ஹேரத் தெரிவித்தார்.



# வவுனியா கல்வியியல் கல்லூரியின் வளப்பற்றாக்குறைகள்

## பாராளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார்

■ க. அகரன்

வவுனியா தேசிய கல்வியில் கல்லூரியில் நிலவும் வளப்பற்றாக்குறைகள் தொடர்பில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் நேற்று (27) பார்வையிட்டார்.

தேசிய கல்வியில் கல்லூரியின் பீடாதிபதி குணரட்ணம் கமலகுமார் தலைமையிலான குழுவினர், பாராளுமன்ற உறுப்பினருக்கு கல்லூரியில் நிலவும் குறைபாடுகளை சுட்டிக்காட்டி இருந்தனர்.

இதன்போது, ஆசிரிய மாணவர்களின் வசதி கருதி அமைக்கப்பட்ட கட்டடங்கள் பல ஆண்டுகளாக நிறைவுறாது காணப்படுகின்றமை, கேட்போர் கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட தரமற்ற வேலைகள், விடுதி பயன்படுத்தமுடியாத நிலைமை போன்றவை தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் சில திணைக்கள தலைவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, காலதாமதமாகும் பணிகளை உடனடியாக செய்வதற்கு உத்தரவிட்டதுடன் தொடர்பான விடயங்கள் குறித்து, ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் கலந்துரையாட உள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.



# மின்சாரம் தாக்கி மீனவர் உயிரிழப்பு

■ ஆர். ஜெயஸ்ரீராம்


ஓட்டமாவடி மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட காவத்தமுனையில் மின்சாரம் தாக்கி மீனவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

காவத்தமுனையைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான முத்துவான் அன்சார் வயது (54) என்பவரே உயிரிழந்துள்ளார். நேற்று முன்தினம் (26) மாலை ஓட்டமாவடி ஆற்றிலுள்ள ஆமை ஓடை குடாவில் மீன் பிடிக்கச் சென்றவர், வீடு திரும்பாமையால், உறவினர்கள் அவரைத் தேடியபோது, இறால் பண்ணைக்கு அருகாமையிலுள்ள நீரோடையில் உயிரிழந்த நிலையில் சடலமாக நேற்று (27) காணப்பட்டார்.

கவத்தமுனை பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள தனியாருக்கு சொந்தமான இறால் பண்ணையின் பாதுகாப்பு கருதி, வேலிகளுக்கு மின்சாரம் இணைக்கப்பட்டுள்ளது. குறித்த மின்சார இணைப்பு, இறால் பண்ணைக்கு அப்பாலுள்ள நீரோடைக்கு குறுக்காவும் இணைக்கப்பட்டுள்ளது. இந்த ஓடையில் பொதுமக்கள், மீன் பிடிப்பது வழக்கமாகும். விடயம் தெரியாத நபர், இச்சட்டவிரோத மின்சார இணைப்பில் அகப்பட்டு உயிரிழந்துள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.



பாத்திமா லனா



பாத்திமா ரோஷினி



பாத்திமா ஷிபாரா

### சர்வதேச அபாகஸ் போட்டியில்

# சாய்ந்தமருது தாறுல் இல்மு கல்வி நிலைய மாணவிகள் சாதனை

■ ஏ.எம் அஸ்லம்

இந்தியா, சென்னையில் நடைபெற்ற சர்வதேச அபாகஸ் போட்டியில், சாய்ந்தமருது தாறுல் இல்மு கல்வி நிலைய மாணவிகளான ஜெளபர் பாத்திமா ரோஷினி, முஹம்மட் அனீஸ் பாத்திமா ஷிபாரா, காலிதீன் பாத்திமா லனா ஆகிய மூவரும் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். இவர்களை, ஆசிரியை ஏ.ஆர் றிஸானா (கல்முனை ஸாஹிறா கல்லூரி கணிதப் பாட ஆசிரியை) பயிற்றுவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வருடாந்த உற்சவம்

■ நா. ஜெயரட்ணம்

வரலாற்று புகழ் மிக்க களுத்துறை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலின் வருடாந்த அலங்கார உற்சவ தேர் பவனி, ஞாயிற்றுக்கிழமை (02) காலை ஒன்பது மணியளவில் கோவில் பிரதம சிவாச்சாரியார் கலாநிதி சிவஸ்ரீ சிவம் ஸ்ரீ சுதர்ஷன சர்மா குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

நாளை (29) முகூர்த்த உற்சவ பத்திரிகை பாடனம், முகூர்த்தக்கால் நடுதலுடன் ஆரம்பமாகும் திருவிழாவில் வெள்ளிக்கிழமை (30) காலை 9.15 மணி முதல் 10.26 மணிவரையிலான சுப வேளையில் திருக்கொடியேற்றமும் சனிக்கிழமை (01) காலையில் பால்குட பவனியும் 1009 சங்காபிஷேகமும் அன்னதானமும் மாலையில் மாம்பழத் திருவிழாவும் நடைபெறும்.

# மேச்சற்றரை தொடர்பான விசேட கலந்துரையாடல்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

மகாவலி அதிகார சபை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேச்சற்றரை போன்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் திங்கட்கிழமை (26) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாநிதி பத்மராஜாவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவ. சந்திரகாந்தன் தலைமையில், வர்த்தக இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் கே. கருணாகரம் ஆகியோரது பங்களிப்புடன் இடம்பெற்றது.

இதன்போது, மகாவலி அதிகார சபையின் எல்லைப் பரப்புகள், அதன் செயற்பாடுகள், எவ்வாறான செயற்பாடுகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர் என்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, மகாவலி அதிகார சபையின் 'வீ' பிரிவுக்கான வதிவிட திட்ட முகாமையாளர் இந்திக்க ரணவீர கருத்து தெரிவிக்கையில், இனிவரும் காலங்களில் மகாவலி திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் எந்த ஒரு திட்டம் தொடர்பாகவும் முடிவுகளை மேற்கொள்ள முன்னர், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு, பிரதேச ஒருங்கிணைப்பு குழு, மாவட்ட அரசாங்க அதிபரின் ஆலோசனைகளைப் பின்பற்றியே திட்டங்களை மேற்கொள்ள உள்ளதாக தெரிவித்திருந்தார்.

# 2 கஜமுத்துகளுடன் நால்வர் கைது

ஒன்றரை கோடி ரூபாய்க்கு இரண்டு கஜமுத்துகளை விற்பனை செய்ய, வாங்குபவர் வரும் வரை கண்டி நகரில் காத்திருந்த 04 சந்தேகநபர்கள், கண்டி ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



கண்டி தலைமையக பொலிஸாரின் ஊழல் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, கண்டி இரண்டாவது சிங்க ரெஜிமென்ட்டுக்கு முன்பாக சந்தேகநபர்கள் காத்திருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அநுராதபுரம், அலவ்வ, தலத்துஓயா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், அவர்கள் 23-33 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும், இரண்டு கஜமுத்துகளும் அநுராதபுரத்தைச் சேர்ந்த சந்தேக நபருடையது எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்கள் இன்று (27) நீதிமன்றில் முன்னிலைபடுத்தப்பட உள்ளனர்.



### மன்னார் மாவட்டத்தில்

# நாகர்கள், இயக்கர்கள் தொடர்பான ஆய்வுக் காணொளி

## வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரிடம் கையளிப்பு

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார் ஊடகவியலாளர் எஸ். ஜெகனின் ஆய்விலும் சட்டத்தரணி செல்வராஜா டினேசனின் அனுசரணையிலும் மன்னார் மாவட்டத்தில் நாகர்கள், இயக்கர்கள் வாழ்ந்த இடங்கள் தொடர்பாக, ஊர்ப்பெயர் ஆய்வு மூலமாக உருவாக்கப்பட்ட ஆய்வுக் காணொளி, வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி ரி. மங்களேஸ்வரனிடம் திங்கட்கிழமை (26) கையளிக்கப்பட்டது. இச்சந்திப்பில், ஆசிரியர் ஆலோசகர் சந்திரலிங்கம் றமேஸூம் கலந்து கொண்டார்.

இலங்கைக்கு விஜயன் வருவதற்கு முன்னர், இங்கு வாழ்ந்த தமிழர்களின் மூத்த குடிகளாகவும் கோத்திர இனத்தவராகவும் வாழ்ந்த நாகர், இயக்கர், வேடுவர் போன்றவர்கள் தமிழர்கள் என்பதை இந்தக் காணொளி எடுத்துக் கூறுகிறது.

இந்த ஆய்வில் மூலம், நாகர் இனத்தவர்கள் மாந்தை பகுதியில் நாகதாழ்வு, பெரிய நாவற்குளம், சிறு நாவற்குளம், நாகபடுவான் போன்ற இடங்களிலும் இயக்கர்கள் மன்னார் கட்டுக்கரையை அண்டிய பகுதிகளான பண்ணை வெட்டுவான், தம்பனைக்குளம், கோரமோட்டை, நெடுங்கண்டல், நெட்டாங்கண்டல், பரப்பாங்கண்டல் போன்ற பல பகுதிகளிலும் வாழ்ந்துள்ளார்கள் என்பதை அப்பகுதிகளில் காணப்படும் இடப்பெயர்கள் ஆய்வின் மூலம் விளக்கப்படுகின்றது.



### கதிர்காம யாத்திரையில் காட்டுப் பாதையில்

# ஆறு நாள்களும் மூன்று வேளை உணவு

■ வி.ரி சகாதேவராஜா

கதிர்காம கந்தன் கோவில் ஆடிவேல்விழா உற்சவத்துக்காக ஆயிரம் வேல்கள் தாங்கிய அடியார்களுடனான வேல் யாத்திரையின்போது, ஆறு நாள்களும் ஆயிரம் அடியார்களுக்கு மூன்று வேளை உணவு, இலவசமாக பரிமாறப்பட்டது.

சித்தர்களின் குரல் சிவசங்கர் குருஜியின் நேரடி வழிகாட்டலின் கீழ், இந்த மாபெரும் வேல் யாத்திரை வேலோடுமலை முருகன் ஆலயத்தின் ஆதீனகர்த்தா முருகஸ்ரீ தியாகராஜா வேல்சாமியாக இருந்து வெற்றிகரமாக நடத்தினார்.

சித்தர்கள் குரல் அமைப்பின் நளபாகச் சக்கரவர்த்தி மதியண்ணா தலைமையிலான குழுவினர் உணவு தயாரித்தளித்தனர். அனைத்து ஏற்பாடுகளும் சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத் தலைவர் மனோகரன் ஆகியோரின் நேரடி ஏற்பாட்டின் கீழ் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ் நிலையத்துக்குள் பலவந்தமாக நுழைய முயற்சி

## 38 வேட்டுகளைத் தீர்த்து கலைப்பு

ஹங்குரன்கெத்த பொலிஸ் நிலையத்திற்குள் பலவந்தமாக நுழைய முற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளனர். சுமார் 200க்கும் மேற்பட்ட கலவரக்காரர்கள் பொலிஸ் நிலையத்தின் கதவுகளை உடைத்து நிலையத்திற்குள் நுழைய முயன்றுள்ளனர்.

திங்கட்கிழமை (26) இரவு நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில் கிட்டத்தட்ட 200 ஆண்களும் பெண்களும் இருந்தனர். மேலும் பெரும்பாலான ஆண்கள் குடிபோதையில் இருந்ததாக ஒரு மூத்த அதிகாரி கூறினார்.

சந்தேக நபர் ஒருவரை கைது செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த குழுவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். எவ்வாறாயினும், சம்பவம் தொடர்பான விசாரணைகள் குறித்து தெரிவிக்கப்பட்ட போதிலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்துசெல்லாமல், பொலிஸ் நிலையத்துக்குள் நுழைய முயன்றுள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸ் நிலையத்துக்குள் நுழைந்திருந்தால், அதிகாரிகளின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கும். ஆகையால், ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக வானத்தை நோக்கி சுட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். எனினும், அங்கு 38 தடவைகள் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக, பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும், துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னர், பொலிஸ் நிலையத்தில் இருந்து கலைந்துசென்ற அக்குழுவினர், சுமார் ஒருமணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவிட்டு, பின்னர் கலைந்து சென்றுள்ளனர்.

# இரத்தினபுரி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரின் தண்டனை உறுதி

கடைக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில், இரத்தினபுரி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சுதத் திஸாநாயக்க உள்ளிட்ட 6 பேருக்கு விதிக்கப்பட்டிருந்த தண்டனையை உயர்நீதிமன்றம் உறுதி செய்தது.

இரத்தினபுரி மேல் நீதிமன்றால் விதிக்கப்பட்ட 5 வருட கடூழிய சிறைத்தண்டனையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டு தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாலந்த எல்லாவல எம்.பியின் கொலையின் போது, கடைக்கு சேதம் விளைக்கப்பட்டது. அந்தச் சேதம் 50,000 ரூபாய் பெறுமதியானது என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மேல்முறையீட்டு மனு, நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ, குரே ராஜா, அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு முன், திங்கட்கிழமை (26) பரிசீலிக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த இரத்தினபுரி மேல் நீதிமன்றம் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டமையால், அறுவருக்கும் கடுங்காவல் தண்டனையுடன் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனையை விதித்திருந்தது.

# மலையக தொழிற்சங்கங்களுக்கு தலையிடியாகும் 'சந்தா'

பெருந்தோட்டங்களைப் பொறுத்தவரையில், பல ஆண்டுகளுக்கு முன்பாக ஓரிரு தொழிற்சங்கங்கள் மட்டுமே செயற்பாட்டில் இருந்தன. தற்போதைய சூழ்நிலையில், தொழிலாளர் ஒருவர் தடக்கி விழுந்தால்கூட, ஏதாவதொரு தொழிற்சங்கத்தின் மீதுதான் விழவேண்டும். அந்தளவுக்கு தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டன.

மலையக அரசியல் கட்சிகளில் இருந்து பிரிந்து செல்வோர், முதலாவதாக தொழிற்சங்கமொன்றை ஆரம்பித்து, அதில் நின்று கொண்டுதான், தமது அரசியல் பணியை முன்னெடுக்கின்றனர். அதற்காக, தொழிலாளர்களை சந்தாக்காரர்களாக இணைத்துக்கொண்டு, தொழிற்சங்க காரியாலயங்களை திறக்கின்றனர். அதில், பணியாற்றுவோருக்கு சந்தா நிதியில் இருந்தே, சம்பளம் வழங்கப்படுகின்றது. இதர செலவுகளுக்கும் சந்தா நிதியையே நம்பியிருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில்தான், தொழிற்சங்களுக்கு சந்தாக்காரர்களாக இணைந்துகொள்ளும் தொழிலாளர்களின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் குறைந்து கொண்டே செல்கின்றது. தொழிற்சங்கங்களால், அனைத்து தொழிலாளர்களுக்கும் நன்மை கிடைக்கிறதா எனக் கேள்வியெழுப்பினால், பல சந்தர்ப்பங்களில் இல்லையென்றே கூறவேண்டும்.

தொழில் பிணக்குகள், நிர்வாகத்துடன் ஏற்படும் முரண்பாடு, வேலையில் இருந்து நீக்கிவிட்டால் அல்லது கொடுப்பனவுகளை மறுத்தால் தொழில் ஆணையாளர், தொழிலாளர் நீதிமன்றத்தை நாடவேண்டிய சந்தர்ப்பங்களின் தொழிற்சங்க பிரதிநிதிகள் முன்னின்று பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுத்தருவர்.

ஏனைய சந்தர்பங்களில் தொழிற்சங்க பிரதிநிதிக்கான தேவை குறைவாகும். எனினும், தோட்டமொன்றில் குடும்பங்களுக்கு இடையில் ஏற்படும் பிரச்சினைகள் பொலிஸூக்குச் சென்றுவிட்டால், அங்கு தொழிலாளர் பிரதிநிதிகள் அல்லது தொழிற்சங்க தோட்டத் தலைவர்களை அழைத்துவருமாறு பொலிஸார் அறிவுறுத்துவர்.

இந்த நடைமுறை, பெருந்தோட்டங்களை அண்மித்த பொலிஸ் நிலையங்களில் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஏனைய பிரதேசங்களைப் பொறுத்தவரையில், முரண்பாடுகள் ஏற்படுமாயின், பொலிஸ் நிலையங்களுக்கு இரு தரப்பினரும் சென்று பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வை பெற்றுக்கொள்வர்.

இந்நிலையில், அறவிடப்படும் சந்தா பணத்தில் இருந்து தொழிலாளர்களுக்கு ஏதாவது நன்மை கிடைக்கிறதா? என்று பார்போமெனில், இல்லையென்றே கூறவேண்டும். அதனால்தான், இம்முறை சந்தாக்காரர்களாக இணைந்துகொள்வதில் இருந்து பெரும்பாலான தொழிலாளர்கள் பின்னடிக்கின்றனர்.

பெருந்தோட்டங்களின் தற்போதைய நிலைமையை அவதானித்தால், அங்கு நிரந்த ஊழியர்களாக கடமையாற்றுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து செல்கின்றது. தோட்டங்களை முறையாக பராமரிக்காமை, தொழிலாளர்கள் மீது சுமத்தப்படும் சுமை, நலன்புரி விடயங்களை கைவிட்டமை, நாளாந்த கூலி உள்ளிட்டவற்றை குறிப்பிடலாம்.

மனித வளத்தை ஈடு செய்வதற்காக, ஓய்வூதியம் பெற்றவர்களே, நாள்கூலியாக இணைத்துக்கொள்ளும் முறைமையையே சில நிர்வாகங்கள் கடைப்பிடிக்கின்றன. அவர்களிடமிருந்து சந்தா பணத்தை அறவிடமுடியாது. அவர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் தொடர்பே இருக்காது.

தொழிற்சங்கங்கள் தங்களுடைய இருப்பை தக்கவைத்துக் கொள்ளவேண்டுமெனில். சந்தா பணத்தை குறைக்கவேண்டும். கிடைக்கும் சந்தா நிதியில் இருந்து சகல தொழிலாளர்களும் பயனடையும் வகையில், திட்டங்களை வகுக்கவேண்டும். இல்லையேல் தொழிற்சங்கம் கேள்விக்குறியாகிவிடும்.




தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.


அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## இது தீர்வா?

# நரகத்தின் இடைவேளையா?



எம்.எஸ்.எம் ஐயூப்

இம்மாதம் 29ஆம் திகதி முதல், ஐந்து நாள்கள் வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது. 30ஆம் திகதி விசேட வங்கி விடுமுறையாக அறிவிக்கப்பட்டதாலேயே தொடர்ச்சியாக, வங்கிகளுக்கு ஐந்து நாள் விடுமுறை கிடைத்துள்ளது.

29ஆம் திகதி ஹஜ்ஜூப் பெருநாள்; 30ஆம் திகதி விசேட விடுமுறை; ஜூலை முதலாம், இரண்டாம் திகதிகள் சனி, ஞாயிறு விடுமுறை தினங்கள்; ஜூலை மூன்றாம் திகதி அதி போயா தின விடுமுறை என்று ஐந்து நாள்கள் விடுமுறையாகிறது.

இந்த ஐந்து நாள்களை, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வேலைத்திட்டத்தின் கீழ், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு பணிகளை ஒழுங்குபடுத்துவதற்காக பயன்படுத்துவதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. ஆனால், இந்த ஐந்து நாள்களில் வங்கிகளில் என்ன நடைபெறப்போகிறது என்பது பெரும்பாலானவர்களுக்கு தெரியாது.

இலங்கை வங்குரோத்து அடைந்த நிலையிலேயே சர்வதேச நாணய நிதியம் தமது வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போகிறது. அத்திட்டத்தின் கீழ், இலங்கை அரசாங்கம் தமது நிதி நிலைமையை சீராக்கிக் கொள்வதற்காக, நாணய நிதியம் ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

வருமான வரிகளை அதிகரிக்க வேண்டும். மின்சாரம் மற்றும் எண்ணெய் விலையை அதிகரிக்க வேண்டும்; இறக்குமதிகளைக் கட்டுப்படுத்த வேண்டும்; வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டும் என நாணய நிதியம் அரசாங்கத்துக்கு வழங்கிய பல்வேறு ஆலோசனைகளை, அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது. அத்தோடு, அந்நிதியம் இலங்கை அரசாங்கத்துக்கு நான்கு வருடங்களுக்கு 2.9 பில்லியன் டொலர் கடனையும் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

அத்தோடு அரசாங்கம், தமக்கு கடன் வழங்கிய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களை அணுகி, தமக்கு வழங்கிய கடன்களை மறுசீரமைக்க அந்நாடுகள் மற்றும் நிறுவனங்களை இணங்கச் செய்ய வேண்டும்.

உண்மையிலேயே அந்நாடுகள் மற்றும் நிறுவனங்கள், அதற்கான உத்தரவாதத்தை கொள்கை ரீதியாக அளித்ததன் பின்னரே, நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை இலங்கைக்கான கடன் தொகையை அங்கிகரித்தது.

ஆனால், கடன் மறுசீரமைப்பின் விவரங்கள் தொடர்பாக அதாவது, இலங்கைக்கு வழங்கிய கடனில் ஒரு தொகையை கைவிட்டுவிடுவதா? அவ்வாறாயின் அவ்வாறு கழித்துவிடும் வீதம் எவ்வளவு? வட்டியை கைவிட்டுவிடுவதா அல்லது வட்டியில் ஒரு பகுதியை விட்டுவிடுவதா, அவ்வாறாயின் எத்தனை வீதம் விட்டுவிடுவது? கடன் திருப்பிச் செலுத்தவதை ஒத்திப் போடுவதா, அவ்வாறாயின் எவ்வளவு காலத்துக்கு போன்றவை தொடர்பாக இன்னமும் அரசாங்கமும் அந்த நாடுகளும் நிறுவனங்களும் உடன்பாடுகளை செய்து கொள்ளவில்லை.

இந்த விடயங்கள் தொடர்பாக, சகல கடன் உரிமையாளர்களும் இணங்க வேண்டும். எல்லாக் கடன்காரர்களையும் சமமாக மதித்து செயற்படுவதாக, அரசாங்கம் நாணய நிதியத்துக்கு உறுதியளித்துள்ளது. அதையே கடன்காரர்கள் விரும்புவர்.

கடந்த ஏப்ரல் மாதம் இறுதியில், இந்த விவரங்கள் தொடர்பான உடன்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்துக்கு அறிவித்து இருந்தது. ஆனால், அந்த விடயம் இன்னமும் நடைபெறவில்லை. மேற்படி சகல விடயங்கள் தொடர்பாகவும் சகல கடன் வழங்குநர்களும் ஒரே நிலைப்பாட்டுக்கு வருவது கடினமான விடயம் என்பதாலேயே இந்த தாமதம் இடம்பெற்றுள்ளது.

ஆயினும், இலங்கை அரசாங்கம் அதைக் கண்டிப்பாக செய்தே ஆக வேண்டும். நாணய நிதியம் இலங்கைக்கு வழங்குவதாக அறிவித்த கடன் தொகையான 2.9 பில்லியன் டொலரில் கடந்த மார்ச் மாதம் 330 மில்லியன் டொலர் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மிகுதி தொகை எட்டு தவணைகளில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஏற்கெனவே இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளுடன், கடன் மறுசீரமைப்பு தொடர்பாகச் செய்து கொள்ளும் உடன்பாட்டின் மீதே, அடுத்த தவணைகள் தங்கியிருக்கின்றன.

இலங்கை அரசாங்கம் உள்நாட்டில் வங்கிகள், சேமலாப நிதியம் போன்ற நிதியங்கள் போன்றவற்றிடம் இருந்து பெற்ற கடனையும் மறுசீரமைக்க வேண்டும் என்று நாணய நிதியம் கூறவில்லை. அந்நிதியம் இலங்கைக்கான கடனை மார்ச் 20ஆம் திகதி அங்கிகரித்து விட்டு, அதன் பிரதிநிதிகள் 21ஆம் திகதி நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போது, இந்த விடயம் தொடர்பாக கேட்கப்பட்டது. உள்நாட்டு கடன்களை மறுசீரமைப்பதா இல்லையா என்பதை இலங்கை அரசாங்கம் தான் தீர்மானிக்க வேண்டும் என்று அவர்கள் கூறினர். ஆயினும், நாம் வழங்கிய கடனை மறுசீரமைப்பதாக இருந்தால், அரசாங்கம் உள்நாட்டில் பெற்ற கடனையும் மறுசீரமைக்க வேண்டும் என்று கடன் வழங்கிய நாடுகள் தான் கூறியுள்ளன. அதனை தட்டிக்கழிக்க அரசாங்கத்தால் முடியாது. அந்தப் பணியைப் பற்றிய விரிவான முடிவுகளை எடுப்பதற்கே, ஐந்து நாள் விடுமுறையை மத்திய வங்கி மற்றும் ஏனைய வங்கிகளின் அதிகாரிகள் பயன்படுத்தப் போகிறார்கள்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு இலங்கையின் வங்கித் துறையையும் சேமலாப நிதியம் போன்ற நிதியங்களையும் பாதிக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டு வருகிறது. மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவும் நிதித்துறைக்கு பொறுப்பான அமைச்சர்களும், அது அவ்வாறு பாதிக்காது என்று கூறி வருகிறார்கள்.

ஆயினும், இறக்குமதிகள் குறைந்து, கைத்தொழில்கள் பாதிக்கப்பட்டு, பொருளாதாரம் சுருங்கி, வங்கிகளின் வருமானம் வெகுவாக பாதிக்கப்பட்டு இருக்கும் நிலையிலேயே, அவற்றிடமிருந்து அரசாங்கம் பெற்ற கடன்கள் மறுசீரமைக்கப்படப் போகின்றன. இந்தக் கடன் மறுசீரமைப்பு விடயம், நாணய நிதியத்தின் வேலைத் திட்டம் எவ்வளவு கஷ்டமானது என்று எடுத்துக் காட்டுகிறது.

இந்த நிலையிலேயே, அரசாங்கம் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுத்தவிட்டது என்பதைப் போல், ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தின் தலைவர்கள் தற்போது கருத்து வெளியிட்டு வருகிறார்கள். கடந்த வருடத்தில் நிலவிய மிகவும் கஷ்டமான நிலைமை, தற்போது சற்று தளர்ந்து இருப்பதாலேயே அவர்கள் அவ்வாறு பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆனால், நாடு இன்னமும் நெருக்கடியில் இருந்து மீளவில்லை.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது அடிப்படையில், வெளிநாட்டு செலாவணி நெருக்கடியாகும். எனவே, அரசாங்கம் கட்டடத் தொழில் போன்ற பல கைத்தொழில்கள் பாதிக்கப்படுவதையும் இறக்குமதியால் கிடைத்த சுங்க வரி குறைவதையும் பொருட்படுத்தாது, தொடர்ந்தும் வெளிநாட்டு செலாவணி வெளியேறுவதை தடுப்பதற்காக இறக்குமதிகளை தடைசெய்தது.

அத்தோடு, வெளிநாட்டு கடன்களை திருப்பிச் செலுத்துவதையும் அரசாங்கம் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி நிறுத்தியது. இதற்கிடையே இவ்வருட ஆரம்பத்தில் இருந்து உல்லாசப் பிரயாணத்துறை, வெளிநாட்டுத் தொழில்கள் ஆகியவற்றின் மூலம் கிடைத்த வெளிநாட்டுச் செலாவணியும் சற்று அதிகரித்தது.

இந்நிலையிலேயே, நாணய நிதியத்தின் கடன் அனுமதிக்கப்பட்டது. அதன் முதல் தொகையும் நாட்டை வந்தடைந்தது. அதற்கு முன்னர் உலக வங்கியின் முதலீட்டுப் பிரிவான சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் இலங்கையில் நான்கு வங்கிகளுக்கு 400 மில்லியன் டொலர் கடனை வழங்க தீர்மானித்தது. உலக வங்கி, எரிவாயு கொள்வனவுக்காக 70 மில்லியன் டொலரை வழங்கியது.

இவ்வாறு, வெளிநாட்டு செலாவணி வெளியேறும் வழிகள் அடைக்கப்பட்டு, வெளிநாட்டுப் பணம் உள்ளே வரும் நிலை உருவாகவே, இலங்கையின் வெளிநாட்டு செலாவணி கையிருப்பு அதிகரித்து, ரூபாயின் பெறுமதி அதிகரிக்கத் தொடங்கியது.

அதன் காரணமாக, எண்ணெய் போன்ற சில பொருட்களின் விலை குறைந்தது. எண்ணெய் விலை ஏனைய பல பொருட்களின் விலையை நிர்ணயிப்பதால், அப்பொருட்களின் விலையும் குறைந்தது. எரிபொருளுக்கும் எரிவாயுவுக்குமான வரிசைகள் இல்லாமல் போய்விட்டன.

இது, நாடு அபிவிருத்தி அடைந்தோ, பொருளாதார நெருக்கடி தீர்ந்தோ ஏற்பட்ட நிலைமை அல்ல! இது, நாட்டில் பொருளாதார நடவடிக்கைகள் தடைப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட இடைக்கால நிலைமையாகும்.

நாணய நிதியத்தின் முதலாவது கடன் தொகைக்குப் பின்னர், மே மாதம் 29ஆம் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கைக்கு 350 மில்லியன் டொலர் கடனை வழங்கத் தீர்மானித்தது. இந்தியாவிடம் ஒரு பில்லியன் டொலர் கடன் பெறுவதற்கும் இலங்கை, பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. அத்தோடு, அரசாங்கம் உலக வங்கியிடம் மேலும் 500 மில்லியன் டொலர் கடனைப் பெறப் போகிறது. இதனாலும் மேலும் நாட்டின் பொருளாதார நிலை சீராகும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

எனினும், கிடைக்கும் வெளிநாட்டுப் பணம் அனைத்தும் நாம் எப்போதோ திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்களாகும். நாணய நிதியத்திடம் இருந்து பெறும் பணத்தையும், ஏற்கெனவே கடந்த சில வருடங்களாக நிலுவையில் உள்ள அந்நிதியத்தின் கடன் தொகையையும் நாலரை ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் செலுத்த ஆரம்பிக்க வேண்டும்.

கடன் மறுசீரமைப்பு மூலம் வெளிநாட்டு கடன்களை திருப்பிச் செலுத்துவதை ஒத்திப் போட்டாலும், ஒரு நாள் அவற்றையும் திருப்பிச் செலுத்த வேண்டும். அத்தோடு, மேலும் கடன் பெறாத நிலையையும் உருவாக்க வேண்டும். அதற்கான திட்டம் ஏதும் இல்லாவிட்டால், தற்போதைய இலகு நிலை, சிலர் கூறுவதைப் போல் 'நரகத்தின் இடைவேளை' (*interval in the hell*) ஆகவே அமையும்.

உற்பத்தி மற்றும் சேவைப் பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதே, இந்தப் பிரச்சினைக்கான தீர்வாகும் என பொருளியல் நிபுணர்கள் கூறுகின்றனர். ஆயினும், அரசாங்கத்திடம் அதற்கான திட்டம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. அதுவே, நாடு எதிர்நோக்கி இருக்கும் மிகப் பெரும் பிரச்சினையாகும்.



## வாழ்வியல் தரிசனம்

சோர்வுடன் கூடிய வலிமையின்மையே, நிலையாமையின் உண்மைத் தன்மையைக் காட்டுகின்றது.

ஆனால், விழிப்புடனும் எழுச்சி நிலையிலும் இருந்தால், வாழ்க்கையின் இன்ப நிலையை இதயம் தேடும். களிப்பு தானாகவே ஆட்கொண்டு விடுகின்றது.

மனமாற்றங்கள் எவரையும் மாற்றிவிட வல்லவை. தேகபலம் குன்றினால், எண்ணங்களின் திசை மாறலாம்.

மனிதர் ஒரே மாதிரி வாழ்வது, அவர்களின் நினைப்புகளைப் பொறுத்தது. தேவையற்ற உணர்ச்சிகளுக்குள் அடைபடக்கூடாது. சலனத்தை உடைக்க, சஞ்சலங்களை எரித்துவிடுக.

இனிமையான வாழ்க்கைக்கு, இதய பரிசுத்தம் எம்முடன் நிலைத்து நிற்கவேண்டும்.

எதிர்ப்புகளை அறிவால், வீரத்தால் எதிர்த்து நிற்கவேண்டும். அவற்றை அமைதியுடன் கையாண்டால், எதிர்ப்புகள் கரைந்துவிடும்.

கஷ்டங்கள் வந்தால், அது நிரந்தமானது எனக்கருதும் நிலையை துளியும் எண்ணலாகாது. பிரச்சினைகள் வந்தால், அவற்றுக்கு எண்ணெய் ஊற்றி வளர்ப்பதை விட்டுவிட்டு, அறிவுடன் இணைந்து தகர்ப்பதே புத்திசாலித்தனம்.

உங்களின் தவறுகளை ஏற்றுக்கொள்க. நீங்களும் மனிதர் தான். நெஞ்சத்து நீதிமன்றத்தில், உண்மைகளை ஏற்றுக்கொள்க! வெட்கம் தேவையில்லை; உண்மையே வாழ்வு.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### இரவில் காட்டு யானைளும்

### பகலில் குரங்குகளும் பயிர்களை அழிக்கின்றன

கிளிநொச்சி, வன்னேரிக்குளம், ஜெயபுரம், ஆணை விழுந்தான், ஆகிய பகுதிகளில் இரவு வேளைகளில் காட்டு யானைகளின் தொல்லையும் பகல் வேளைகளில் குரங்குகளின் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுவதன் காரணமாக, தமது விவயாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் 70 சதவீதத்துக்கும் அதிகமானோர் விவசாயத்தை வாழ்வாதாரத் தொழிலாக கொண்டுள்ளனர். தற்போது நெற் செய்கையை விட, மேட்டு நிலச் செய்கைகளும் அதிகளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்ட இடங்களில், இவ்வாறு பெருமளவில் செய்கை பண்ணப்படும் பயிர்களை, யானைகளும் குரங்குகளும் மற்றும் ஏனைய காட்டு விலங்குகளும் அழிவுகளை ஏற்படுத்தி வருவதாக, விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால், பாரிய அளவில் அழிவுகள் ஏற்படுவதால், நட்டத்தை எதிர் கொள்வதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

-யது பாஸ்கரன்



# காந்தாரா திரைப்படத்தின் ஒரு கோணம்



கணேஸ்குமார் மதியந்தி
இரண்டாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கன்னட மொழியில் வெளியாகி 2022 செப்டெம்பர் 30 அன்று ரிஷப் செட்டியால் தயாரிக்கப்பட்டு பி .லோக்நாத் என்பவரின் இசையமைப்புடன் 160 மில்லியன் பட்ஜெட்டுக்குள் டப்பிங் செய்து வெளியிடப்பட்ட காந்தாரா திரைப்படமானது கன்னட மக்களின் வாழ்க்கையினை பிரதிபலிக்க கூடிய பலவித வெற்றிகளையும் பாராட்டுகளையும் சம்பாதித்த ஒரு திரைப்படம் எனலாம்.

இத்திரைப்படமானது கர்நாடகா மாநிலத்தில் துளு நாட்டில் கொண்டாடப்படும் 'பூதகோலா' எனும் தெய்வ வாக்கு கூறும் மறைந்துபோன தெய்வங்களினுடைய வரலாறுகளை எடுத்துக்காட்டக் கூடிய திரைப்படமாக அமைகின்றது. கே ஜி எஃப் 2 திரைப்படத்திற்கு அடுத்து உலக அளவில் ரூபாய் 400 கோடியை வசூல் செய்த வெற்றி படமாக இந்த காந்தாரா திரைப்படம் திகழ்கின்றது.

இதன்படி இத் திரைப்படமானது ஆதிவாசிகளின் தெய்வமாக போற்றப்படும் காந்தாராவான பஞ்சுருளியை பற்றியும், அக்கடவுளை சார்ந்த நம்பிக்கை மக்கள் மத்தியில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதனையும், இந்தத் தெய்வம் சார்ந்த நம்பிக்கை இல்லாதவர்கள் பிற்பகுதியில் அந்த தெய்வங்களாலேயே அடையாளம் காணப்படும் அளவுக்கு கதை நகர்வதை அவதானிக்க கூடியதாக உள்ளது

உண்மையில் காந்தாரா என்பது கன்னட மொழியில் அடர்ந்த காடு, புராணக்காடு, மர்ம காடு என பல பொருள்களை கொண்டுள்ளது. அதாவது மனிதனுடைய வாழ்க்கையும் அடர்ந்த காடு போன்றது. அது இன்பம், துன்பம், இறப்பு, பிறப்பு என பல்வேறான சக்திகளுக்குள் சிக்கிக் கொள்ளாமல் மோட்சம் அடைய வேண்டும் என்பது இதனுடைய பொருளாக அமைகின்றது. இதனை இந்த காந்தாரா திரைப்படத்தில் மிக அழகாக காட்டியுள்ளனர்.

காந்தாரா திரைப்படத்தில் துளு மக்களினுடைய தெய்வங்களாகிய பஞ்சுருளி மற்றும் எம் கண்ணுக்குத் தென்படாத குளிகா என்ற தெய்வங்கள் பற்றி அந்த திரைப்படத்தில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கும். அதாவது வராதா விஷ்ணுவின் அவதாரமாக ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் துளுநாட்டில் பஞ்சருளி என அழைக்கப்பட்டது. இதற்கு உருவம் கிடையாது. கல்லொன்றை நிலை குத்தாக வைத்து வருடத்திற்கு ஒருமுறை பூதகோலா என்ற பாரம்பரிய ஆட்டம் நிகழ்த்தப்பட்டு வாக்கு கேட்கப்படும். அப்போது வராகத்தை போன்ற உருவக் கவசம் சாத்தப்படும். பஞ்சுருளி தெய்வத்திற்கு என்று கதை கிடையாது. மனிதன் அடிக்கடி சிங்கம், புலியுடன் தொடர்பு கொள்வதில்லை. ஆனால் சாதுவான வராகத்துடன் அடிக்கடி தொடர்பு கொள்வது. இதனை பல்வேறான உத்திகளின் ஊடாக திரைப்படத்தில் எடுத்துக் காட்டியுள்ளார் ரிஷப்செட்டி.

பூதக்கோலா ஆடுபவர்கள் பஞ்சுருளியின் காவல் தெய்வமாக காணப்படுகின்ற குளிகாவாகிய காட்டுப்பன்றி வடிவத்தினை தலையில் கொண்டிருப்பர். மேலும் கன்னட மொழியில் காந்தாரா என்பதற்கு மோட்சம் என பொருள் கொள்ளப்படுகின்றது. அதேபோன்று திரைப்படத்தின் இறுதியிலும் பூதகோலா ஆடுபவர்கள் மோட்சம் அடைவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. மேலும் குளிகா என்ற தெய்வம் என்பது மிகவும் விசித்திரமான தெய்வம். இதனுடைய குறியாக சிவா என்ற கதாபாத்திரம் காணப்படுகின்றார். இவரினுடைய செயற்பாடுகள் குளிகாவின் வடிவத்தினை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. அதாவது பூமிக்கும் வானத்திற்கும் இடையில் குடிசை அமைத்து வாழுதல், கள் அருந்துதல், மீன்களை வேட்டையாடுதல், காட்டுப்பன்றியினை வேட்டையாடி உட்கொள்ளுதல், சுருட்டு புகைத்தல் முதலியவற்றை குறிப்பிடலாம்.






உண்மையில் காந்தாரா திரைப்படமானது ரசிகர்களை மெய்ச்சிலிர்க்க வைத்த ஒரு திரைப்படமாக காணப்படுவதோடு , அனைவருடைய மனதையும் கவர்ந்த ஒரு திரைப்படமாக காணப்படுகின்றது. ஒட்டு மொத்தத்தில் இத் திரைபடமானது வரலாற்று ரீதியாகவும் இடம்பிடித்த மக்களுடைய மனதை விட்டு நீங்காத ஒரு திரைப்படமாக அமைந்துள்ளது என முடிவுக்கு வரலாம்.

# ஆண்களிடத்தில் கலையின் பரம்பல்



கணேஸ்குமார் மதியந்தி
ஊடகக் கற்கைகள் துறை,
இரண்டாம் வருடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மனித இனம் தோன்றி வளர்ந்த இடங்களில் எல்லாம் அறிஞர்களின் இயல்புகளுக்கும் வாழ்வியல் முறைமைகளுக்கும் ஏற்றவாறு மக்கள் தம் உணர்வுகளை வாய்மொழி மூலமாகவோ, கைவினைகள் மூலமாகவோ வெளிப்படுத்தி வருவதனை பொதுவாக நாட்டுப்புற கலைகள் எனலாம்.

இவ்வாறான கலை எவ்வாறு இன்றைய சூழலில் காணப்படுகின்றது என்பததை, கள ஆய்வு செய்வதற்காக மன்னாருக்குச் சென்ற போது, பல்வேறு விடயங்களை பெற்றுக்கொள்ள முடிந்தது. மன்னாரில் முசலி கிராமத்தில் கோலாட்டம் பெரு வழக்காக இடம்பெற்று வருவதோடு, அந்தக் கிராமத்தின் பண்பாட்டினை பிரதிபலிப்பதாகவும் அமைகின்றது.

நான், அந்த கிராமத்தில் உள்ள மக்களை சந்தித்து பல தகவல்களைப் பெற்றுக் கொண்டேன். இதன்படி ஒரு விவசாயியான, எஸ்.எல்.எம் அப்துல் காதர், அந்தக் கிராமத்தில நெடுங்காலமாக கோலாட்டத்தில் ஈடுபாடுடன் செயற்பட்டு வருகிறார். அவ்வூரில் கோலாட்ட நிகழ்வானது 'களிகம்பு' என அழைக்கப்படுகின்றது.

களிகம்பு என்பது சந்தோஷத்திற்காக ஆடப்படும் ஒரு கலை. களிப்பு என்பது காட்சி, கண்டு களித்தல் எனக் கூறப்படுகின்றது. இதில் பயன்படுத்தப்படும் தடியானது தரணி, சாயா, சிலுந்தி எனும் மரங்களில் எடுக்கப்படுகிறது. ஒரு மாதத்திற்கு மேல் வெயிலில் காயவைக்கப்படுவதோடு, அது அதிகளவான ஒலியெழுப்பக் கூடியதாகவும் இருக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ் ஊரில் கோலாட்டப் பாடலானது 24 அடி, எட்டு அடி, நான்கு அடி என அமைவதோடு மல்லி, கிறுவை, தாளம் என வரிசை கிரமமாக பாடப்படும். இதில் ஒவ்வொரு தாளத்திற்கும் உட் சென்று வெளிவருவதும் வெளியில் இருந்து உட்செல்வதும் என மாறி மாறி நடைபெறும். இக்கோலாட்ட பாடலை அவர்கள் 'சிந்து பாடல்' எனவும் அழைப்பர். சிந்து பாடலில் 'தன்னானே தன்னானே' என்றும் பாடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உதாரணமாக, பெண்ணில் விளையும் செழிப்பையும் பாரடி செம்பரித்தாள தேசம் அற்புதமானதடி நந்தவனமும் நல்ல வாயும் தோனுதடி நாடி நடக்க கடக்க நடுமனை காணுதடி கொட்டியும் ஆம்பலும் கூடி எடுக்க கொள்கையை பாரடி மானே அட்டி இல்லாமல் அறியும் வந்தாய் ஆனந்தம் பாடுவது ஏனோ எட்டி நீ பார்த்ததே ஏக்கம் கொள்ளாமல் இழுத்துக் கொள்வாய் திறந்தானே எட்டியே ஏகுது ஏறிய வாகனம் இயந்திரலாது மானே எனப் பல பாடல்கள் கல்யாண வீடு, பூ புனித நீராட்டு விழா, கலை விழா, பொதுமக்கள் கூடும் இடங்கள் என பல்வேறு சந்தர்ப்பங்களில் அந்த ஊரில் பாடப்பெற்று வருகின்றது.

இக்கோலாட்டமானது இஸ்லாமியர்களின் பரம்பரை பரம்பரையாக அச்சமூகத்தில் பரவியதாக கூறப்படுகின்றது. இக்கோலாட்ட பாடலானது பொது பாடலாகவும், தற்பொழுது இட்டுக்கட்டப்பட்ட பாடலாகவும் உள்ளது. இக்கோலாட்டப் பாடல்களானவை, கோலாட்டம் இலக்கணத்தைப் பிரதிபலிப்பதாக பாடப்பட்டதாக அமைகின்றது.





எனக்கு தகவல்களை வழங்கிய எஸ். எல்.எம் அப்துல் காதரும் ஒரு கோலாட்டக் கலைஞர். வயது 69. இவர் முசலி பிரதேசத்தில் விவசாயத் தொழிலை மேற்கொள்வதோடு கோலாட்ட பாடல் பாடுவதிலும் தேர்ச்சி பெற்றவராக விளங்கி வருவதோடு, தாலாட்டு பாடல் பாடுவதிலும் வல்லவராக விளங்குகின்றார்.

இவரை போல ஊரில் பலரும் இவ்வாறான நாட்டார் கலைகளில் ஈடுபாடு உடையவர்களாக காணப்படுவதனை குறிப்பாக ஆண்கள் ஈடுபாடு உடையவர்களாக காணப்படுகின்றார்கள் என்பதனை அவதானிக்கும் போது, அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வந்து அவர்களை கௌரவப்படுத்த வேண்டும்.

உண்மையில் தாலாட்டு பாடல் என்றால் எமக்கு பெண்களே ஞாபகத்திற்கு வருவார்கள். ஆனால், அத்திறமை ஆண்களிடமும் காணப்படுகின்றது என்பதை இதன் மூலமாக உணரக்கூடியதாக இருந்தது. ஆகவே, நாம் வாழும் ஒவ்வோர் ஊரிலும் இவ்வாறான பல்வேறு நாட்டார் கலைகள் எம் மூதாதையர்கள் மத்தியில் புதைந்து காணப்படுவதை எம்மால் பல்வேறான சந்தர்ப்பங்களில் அவதானித்திருக்க முடியும். அத்தோடு அது எமது வாழ்க்கைக்கு பல்வேறு விதமான வழிகளில் உதவக்கூடியதாகவும் அமையும். ஆகவே அதனை வெளிக்கொண்டுவர வேண்டியது எமது ஒவ்வொருவரின் கடமையாகும். நாம் அவர்களது திறமைகளை வெளிக்கொண்டு வந்து எமது நாட்டார் கலைகளை வளர்த்தெடுப்போம்.

# தண்ணீர் தண்ணீர் திரைப்பட விமர்சனம்



தங்கராசா விதுஷன்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தமிழ் சினிமா வரலாற்றில் வெளிவந்த மிகச்சிறந்த திரைப்படங்களில் 'தண்ணீர் தண்ணீர்' படமும் ஒன்றாகும். இது 1981 ஆம் ஆண்டில் இயக்குநர் பாலசந்தரின் இயக்கத்தில் கோமால் சுவாமிநாதனின் எழுத்தில் வெளியாகிய திரைப்படமாகும். இதற்கு உயிரூட்டும் வகையில் எம்.எஸ் விஸ்வநாதனின் இசை இடம்பெற்றுள்ளது. இத்திரைப்படத்தின் கதைச்சுருக்கம் பற்றி பார்த்தோமானால், தமிழ்நாட்டில் ஒரு சிறிய கிராமம் தண்ணீர் பிரச்சினையை எதிர்கொள்கின்றது. கிராம மக்கள் தங்கள் பிரச்சினையை தீர்க்க முயலும் போது, அதிகாரிகளின் மூலம் துன்பங்களை அனுபவிக்கின்றனர். இறுதியில் தங்களது தண்ணீர் பிரச்சினையை தீர்க்க யாரும் இல்லையா என்பதனை யதார்த்தபூர்வமான வாழ்வியலின் ஊடாகவும் சிந்திக்கத் தூண்டும் முடிவுடன் காட்டி இருக்கின்றார் இயக்குநர்.

இத்திரைப்படத்தின் திரைக்கதை அமைப்பு, ஒரே கதைக்களத்தை கொண்டு நகர்கின்றது. மனித வாழ்வியல் சம்பந்தமான படம் என்பதால் அந்த வகையிலான திரைக்கதை அமைப்பு மிகவும் பொருத்தமானதாக அமைந்தது.

முதலாவது காட்சியிலே, தான் சொல்ல வருகின்ற கதை என்ன என்பதை காண்பித்தது ஒரு வலிமையான திரைக்கதைக்கு நல்ல உதாரணமாகும். இன்னும் பல்வேறு இடங்களில் திரைக்கதையில் ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டிருந்தது. குறிப்பாக, மழைத்துளி வரும்போது, அந்த கிராமத்துப் பெண் ஊர் மக்களை ஒன்று கூட்டி கொண்டாடுகிறாள். இறுதியில் மழை பெய்யவில்லை என்பது ஏற்ற இறக்கங்களை கொண்ட திரைக்கதைக்கு உதாரணமாகும்.

இந்தத் திரைப்படத்தில் காட்சி, மொழி, வசனங்கள் பொருத்தமானதாகவும் அழுத்தமாகவும் இடம்பெற்றிருந்தன அதில் குறிப்பாக, ஓட்டை விழுந்த ஒரு கரும்பலகையில், இந்தியா வளமான நாடு என எழுதப்பட்டு கற்பிக்கப்படுவது; வாக்களிக்காமல் சகல மக்களும் பகிஷ்கரிப்பு செய்யும் போது, ஒருவர் மட்டும் உள்ளே சென்று, குடத்தில் உள்ள தண்ணீர் குடிக்கிறார். அப்போது அவர் வெளியே வர, ஊரே அவரை எதிர்க்க ஆரம்பித்தது. அப்போது அவர், "நான் ஓட்டுப் போட உள்ளே செல்லவில்லை; உள்ளே நல்ல தண்ணீர் இருப்பதால் தண்ணீர் அருந்த போனேன்" எனக் கூறுகிறார். இது போன்ற பல்வேறு இடங்களில் காட்சி மற்றும் வசனங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

கதாபாத்திரங்கள் மற்றும் நடிப்பினை பொறுத்தவரை, யதார்த்தமானதாகவே காணப்படுகின்றன. திரைப்படம் பார்க்கும் போது அது ஊருக்குள் சென்று வாழ்ந்து விட்டு வந்த ஓர் உணர்வு இருக்கும். பல கதாபாத்திரங்களையும் காட்சிகளையும் அரசியலோடு இணைத்து காட்டியிருப்பார் இயக்குநர்.




இத்திரைப்படத்தின் ஒளிப்பதிவு பற்றி பார்ப்போமானால் அங்கு வழமையான திரைப்படங்களின் ஒளிப்பதிவு முறைகள் பின்பற்றப்பட்டு இருந்தன. குறிப்பாக இங்கே long shots, wide shots என்பன அதிகம் பயன்படுத்தப் பட்டிருந்தன. மேலும் *mid, extrem clous up, over the shoulder* போன்ற *shots* உம் மிகவும் பொருத்தமான இடங்களில் *close up shots* களும் பயன்படுத்தப்பட்டு இருந்தன. அத்துடன் *camera movement shots* களும் அதிகம் பயன்படுத்தப்பட்டு இருந்தன.

இத்திரைப்படத்தின் இசை, சத்தம் போன்றவற்றை நன்றாகவே பயன்படுத்தப் பட்டிருந்தன. எம்.எஸ் விஸ்வநாதன் போன்ற இசை ஜாம்பவான்கள் இப்படத்தின் உயிர்ப்புக்கு மிகவும் உதவியாக இருந்துள்ளனர். வழமையான சினிமாவை போன்ற பாடல்கள் இடம் பெற்று இருந்தாலும் கூட, அவை கதையோட்டத்தையே கதையின் கருவையே திசைதிருப்புவதாக அமையவில்லை. சத்தங்களை பொருத்தவரை குழந்தை அழும் சத்தம் ,பெண்கள் அழும் சத்தம், தண்ணீர் சத்தம், மழைத்துளி சத்தம் போன்றன அழுத்தமாக கேட்கும் முகமாக அமைந்திருந்தன.



பிங்க் நிறத்தில் ஒரு பிசாசு

# தொட்டோம்; கெட்டோம்



பல்வேறு புதிய அம்சங்களை வழங்குவதாக வரும் தகவலை நம்பி பிங்க் வாட்ஸ் அப்பை தொட்டீர்கள் என்றால் உங்கள் ஸ்மார்ட் போன் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்காது என எச்சரிக்கிறார்கள் நிபுணர்கள்.

காய்த்த மரம் தான் கல்லடி படும் என்பார்கள். அது போலத்தான் எது ஒன்று பிரபலமாக இருக்கிறதோ அதைதான் மோசடிக்காரர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அந்த வகையில் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான பயனர்களைக் கொண்டுள்ள வாட்ஸ் அப் இப்போது குறிவைக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே வாட்ஸ் அப் செயலியை பயன்படுத்தி வரும் பயனர்களுக்கு அண்மையில் ஒரு மெசேஜ் அனுப்பப்படுகிறது. அந்த மெசேஜில் வரும் லிங்கை கிளிக் செய்தால் வாட்ஸ் அப் லோகோ பிங்க் நிறத்திற்கு மாறும் என்றும், அதை தொடர்ந்து வாட்ஸ் அப் பல்வேறு அப்டேட்களைப் பெறும் எனவும் அந்த மெசேஜில் கூறப்பட்டிருக்கும். இதை நம்பி அந்த லிங்கை தொட்டோம்: கெட்டோம்.

அந்த லிங்கை கிளிக் செய்தால் வரக்கூடிய விபரீதங்களை வெளிப்படுத்தியுள்ளது. அதுமட்டுமின்றி, தெரியாமல் கூட பிங்க் வாட்ஸ்அப்பை டவுன்லோட் செய்ய வேண்டாம். அவ்வளவு ஏன், டவுன்லோட் செய்வதற்கான லிங்க்-ஐ கூட கிளிக் செய்ய வேண்டாமென்று வாட்ஸ்அப் பயனர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.



சிறுமி

ஸ்காட்லாந்து

## 3 வயது சிறுமிக்கு கென்சர்

ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த அவா போல்டன் என்ற 3 வயது சிறுமி நியூரோபிளாஸ்டோமா என்ற நோயால் அவதி அடைந்து வருகிறார். இது ஒரு வகையான புற்றுநோய் ஆகும். தற்போது நோயின் தாக்கத்தில் 4ஆம் நிலையை இவர் அடைந்துள்ளார்.

முன்னதாக, இந்த குழந்தை அளவுக்கு அதிகமாக வாந்தி எடுத்த நிலையில், அது வைரஸ் காய்ச்சல் என்று குடும்பத்தினர் நினைத்துக் கொண்டனர். அவளுக்கு 5 வயது சகோதரன் இருக்கிறான். அந்த சிறுவன் உட்பட மொத்த குடும்பமும் தற்போது சோகத்தில் மூழ்கியுள்ளது.

அவா போல்டனை பரிசோதித்த மருத்துவர்கள், இந்த நோய்க்கு சிகிச்சை அளிக்க ரூ.2.6 கோடி ரூபாய் செலவாகும் என்றும், இதில் இருந்து மீண்டு வருவதற்கு 18 மாதங்கள் ஆகும் என்றும் தெரிவித்துள்ளனர். சிறுமியின் பெற்றோரான ஸ்காட் மற்றும் நடாலி போல்டன் ஆகியோரிடம் இவ்வளவு பெரிய தொகை இல்லாத நிலையில், ஆன்லைன் மூலமாக அவர்கள் உதவி கேட்டு வருகின்றனர்.

## குதிரைக்கு முடி வெட்டினால் தினமும் 1 இலட்சம் சம்பளம்




5 இலக்கத்தில் அல்லது லட்சத்திற்கு மேல் சம்பளம் எந்தெந்த வேலைக்கு கிடைக்கும் என்ற கேள்வியை கேட்டால் நாம் சட்டென்று முதலில் ஐடி துறையைத் தான் குறிப்பிடுவோம். அதுபோக மருத்துவர்கள், பொறியாளர்கள், அரசு அதிகாரிகள், ஆசிரியர்கள் என வெகுசிலர் மட்டுமே இந்த வரிசையில் இணைவார்கள்.

இதையெல்லாம் தவிர்த்துப் பார்த்தோம் என்றால் கூலி வேலை என்றாலும், வெளிநாடுகளில் வேலை செய்பவர் என்றால் அவர்களது ஊதியம் இலட்சத்தை தாண்டி இருக்கலாம். இதில் மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் இலட்சத்திற்கு மேல் ஊதியம் என்பது மாதத்திற்கு தான். ஆனால், தினசரி லட்சத்திற்கு மேல் சம்பாதிக்க முடியும் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? அதிலும் குதிரைக்கு முடி வெட்டி விடும் நபருக்கு இவ்வளவு பெரிய சம்பாத்தியம் கிடைக்கும் என்றால் நிச்சயமாக நீங்கள் ஆச்சரியம் அடையக் கூடும்.

ஆனால், எல்லோராலும் இதை அவ்வளவு சுலபமாக செய்துவிட முடியாது. ஐக்கிய அரபு அமீரக நாடுகள், சவுதி அரேபியா, கட்டார், ஈரான், குவைத் ஆகிய நாடுகளில் நாடுகளில் குதிரைகளுக்கு முடி வெட்டும் பணியாளர்கள் கிடைப்பது மிக அரிது. அதனால் அதற்கான ஊதியமும் அதிகம். ஒரு குதிரைக்கு முடி வெட்டினால் சுமார் 150 டொலர்கள் ஊதியமாக வழங்கப்படுகிறதாம். ஒரு குதிரைக்கு முடி வெட்டுவதற்கு ஒரு மணி நேரம் பிடிக்கும். சராசரியாக நாளொன்றுக்கு 10 குதிரைகளுக்கு முடி வெட்டிவிடும் பட்சத்தில் 1.20 இலட்சம் ரூபாய் வருவாய் ஈட்டலாம்.

திருப்பதி

## வாடகைத் தாய் முறையில் பிறந்த கன்றுக்குட்டி




வாடகைத் தாய் முறை குழந்தை பெறுவது பற்றி நாம் கேள்விப்பட்டிருப்போம். பல பிரபலங்கள் வாடகைத் தாய் மூலம் குழந்தைகளைப் பெற்றெடுக்கிறார்கள். ஆனால் இந்திய வரலாற்றில் முதன்முறையாக வாடகைத் தாய் மூலம் ஒரு பசு கன்று பிறந்துள்ளது.

ஓங்கோல் ரக பசுவிற்கு சாஹிவால் ரக கன்று பிறந்ததாக திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாக அலுவலர் தர்மா ரெட்டி தெரிவித்தார்.

மாநில அரசின் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டியின் அறிவுறுத்தலின் பேரில், TTD மற்றும் SV கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் இணைந்து உள்நாட்டு கால்நடை இனங்களை மேம்படுத்த கடந்த ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதன் ஒரு பகுதியாக, மேலு வகை நாட்டு மாடு இனத்தை வளர்க்கும் வகையில், SV பசு பராமரிப்பு நிலையத்தில், மேலு இன மாடுகளிடம் இருந்து முட்டை சேகரிக்கப்பட்டது.

எஸ்வி கால்நடை பல்கலைக்கழகத்தின் ஐவிஎஃப் ஆய்வகத்தில் செயற்கை முறையில் கருக்கள் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. நாட்டிலேயே முதன்முறையாக டிடிடி கோசாலை மாடுகளில் இவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், ஜூன் 24 இரவு வாடகைத் தாய் முறையில் ஓங்கோல் பசுவிற்கு பிறந்த சாஹிவால் கன்று பிறந்துள்ளது. இதற்கு பத்மாவதி என்று பெயர் சூட்டப்பட்டதாக தேவஸ்தான அலுவலர் தர்மா ரெட்டி தெரிவித்துள்ளார்.



இங்கிலாந்து

## 60 வருடங்கள் கழித்து இணைந்த சகோதரிகள்

யார் என்றே தெரியாத இரண்டு பெண்மணிகள் தாங்கள் சகோதரிகள் என்பதை உணர்ந்து 60 ஆண்டுகளுக்கு பின் ஒன்றிணைந்த நெகிழ்ச்சியான சம்பவம் இங்கிலாந்தில் நடந்துள்ளது.

இருவருக்குமே தனக்கொரு சகோதரி இருக்கிறார் என்பதை தெரியாமல் இருவரும் தங்களது வாழ்வை தனித்தனியாக வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வந்துள்ளனர். தன்னுடைய மருமகனான ஜேசன் பிஷர் என்பவரின் முயற்சியின் காரணமாக, டிஎன்ஏ சோதனை செய்யும் வலைத்தளமான myheritage.com என்ற வலைத்தளத்தின் உதவியுடன் டிஎன்ஏ சோதனை நடத்தப்பட்டு இருவரும் சகோதரிகள் என்பதனை உறுதி செய்துள்ளார்.

இவர்களின் தாயாரான லில்லியன் ஃபிஷர் என்பவர் 17 வயதாக இருக்கும் போது திருமணத்திற்கு முன்பே ஜூலி மாமோவை பெற்றெடுத்துள்ளார். சமுதாயத்தின் அழுத்தத்தின் காரணமாக தனது குழந்தையை தத்து கொடுத்துள்ளார். அதன் பிறகு தன்னுடைய வாழ்க்கையை செழுமையாக வாழ்ந்த பிஷர் மேலும் நான்கு குழந்தைகளையும் பெற்றெடுத்துள்ளார்.

அவர்களின் மூத்தவர் தான் ஜூலி ஆன்சல். இவர் தற்போது இங்கிலாந்தில் வசித்து வருகிறார். அதே சமயத்தில் தத்து கொடுக்கப்பட்ட ஜூலி மாமோவை ஒன்பது நாள் குழந்தையாக இருக்கும்போது மாவிஸ் மற்றும் டேவிட் ஹாலண்ட் தம்பதியினர் தத்தெடுத்து கொண்டு ஆஸ்திரேலியாவிற்கு சென்று அங்கு புதியதொரு வாழ்க்கையை தொடங்கியுள்ளனர். இந்நிலையிலேயே, இவ்விருவரும் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# மேற்கிந்தியத் தீவுகளை வென்ற நெதர்லாந்து



சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில், ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுடனான குழு ஏ போட்டியில்ன் சுப்பர் ஓவரில் நெதர்லாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நெதர்லாந்து

மேற்கிந்தியத் தீவுகள்: 374/6 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: நிக்கலஸ் பூரான் ஆ.இ 104 (65), பிரண்டன் கிங்க் 76 (81), ஜோன்ஸன் சார்ள்ஸ் 54 (55), ஷே ஹோப் 47 (38), கீமோ போல் ஆ.இ 46 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: சஹிப் ஸுல்ஃபிஹார் 2/43, விவியன் கிங்மா 1/66)

நெதர்லாந்து: 374/9 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: டெஜா நிடமனுரு 111 (76), ஸ்கொட் எட்வேர்ட்ஸ் 67 (47), விக்ரமஜித் சிங் 37 (32), மக்ஸ் ஓ டௌட் 36 (36), பஸ் டீ லீட் 33 (47), லோகன் வான் டீ பீக் 28 (14), வெஸ்லி பரெஸ்ஸி 27 (34), அர்யன் டுட் 16 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேஸன் ஹோல்டர் 1/59)

நெதர்லாந்து: 30/0 (1 ஓவ. ) (துடுப்பாட்டம்: லோகன் வான் டீ பீக் ஆ.இ 30 (06) ஓட்டங்கள்)

மேற்கிந்தியத் தீவுகள்: 8/2 (0.5 ஓவ. ) (பந்துவீச்சு: லோகன் வான் டீ பீக் 2/8)

மற்றைய போட்டியில் ஐக்கிய அமெரிக்காவை சிம்பாப்வே வென்றிருந்தது.

## 'மலையகத்தில் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவது தொடர்பில் கூட்டுப் பொறிமுறை'



மலையகத்தில் கால்பந்தாட்டம் உள்ளிட்ட விளையாட்டுத்துறையை மேம்படுத்துவது தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சுடன் இணைந்து கூட்டு பொறிமுறை ஒன்று உருவாக்குப்படும் என ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மேலும் அத்துடன் இலங்கையில் தேசிய மட்டத்தில் உள்ள விளையாட்டு வீரர்களின் ஆலோசனைகளும், ஒத்துழைப்புகளும் பெறப்படும் எனவும் தெரிவித்தார்.

ஜீவன் தொண்டமானுக்கும், ஹட்டன் பகுதிகளில் உள்ள கால்பந்தாட்டக் கழகத்தின் தலைவர்களும், செயலாளர்களுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று கொட்டகலையில் நடைபெற்றது.

இதன்போது கால்பந்தாட்ட மேம்பாடு உட்பட விளையாட்டுத் துறை அபிவிருத்தி சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டன. கழக உறுப்பினர்கள் தமது தரப்பு கோரிக்கைகளை முன்வைத்தனர். அவற்றை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், விளையாட்டுத்துறை அமைச்சருடன் இது விடயம் சம்பந்தமாக பேச்சு நடத்தப்படும் எனவும் அமைச்சர் இதன்போது உறுதியளித்துள்ளார்.



## இன்று ஆரம்பிக்கும் இரண்டாவது ஆஷஸ் டெஸ்ட்

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியானது லோர்ட்ஸில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.


ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை அவுஸ்திரேலியா வென்றிருந்தபோதும் தமது புதிய பாணியை இங்கிலாந்து மாற்றாது என்றே தெரிகிறது.

கடந்த போட்டியில் விளையாடிய மொயின் அலியை இப்போட்டிக்கான அணியில் ஜொஷ் டொங் பிரதியிட்டுள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலிய அணியில் ஸ்கொட் போலண்டை மிற்செல் ஸ்டார்க் பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

றியல் மட்றிட்டில்

## புதிய ஓராண்டு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்ட மோட்ரிச்



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்றிட்டில் அடுத்தாண்டு வரை தன்னை வைத்திருக்கும் புதிய ஓராண்டு ஒப்பந்தத்தில் அக்கழகத்தின் மத்தியகள வீரரான லூகா மோட்ரிச் கைச்சாத்திட்டுள்ளார்.

சவுதி அரேபியக் கழகங்களுக்குச் செல்லும் வாய்ப்பு 37 வயதான மோட்ரிச்சுக்கு காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்ட

## கால்பந்தாட்ட மத்தியஸ்தர் அமைப்பின் வருடாந்த பொதுச்சபை கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

■ நூருல் ஹுதா உமர்




அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட மத்தியஸ்தர் அமைப்பின் வருடாந்த பொதுச்சபை கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி மண்டபத்தில் அமைப்பின் பதில் தலைவர் எம். ஏ. பர்ஸான் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது பிராந்திய கால்பந்தாட்ட மேம்பாடு, அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட மத்தியஸ்தர் அமைப்பின் எதிர்காலச் செயற்பாடுகள், மத்தியஸ்தர் கௌரவிப்பு உட்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது. அதனடிப்படையில் போசகர்களாக சிரேஷ்ட மத்தியஸ்தர்களான எம்.ஏ. நபார், எம்.ஐ.எம். அமீரலி ஆகியோரும், ஆலோசகர்களாக ஏ.எம்.எம். இப்ராஹிம், ஏ.எம். இப்ராஹிம், ஏ.எல்.ஏ. கனி, யூ.எல். எம். ஹனீபா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் தலைவராக எம்.எல்.எம். ஜமால்தீன், தவிசாளராக எம்.எல்.ஏ. தாஹீர், செயலாளராக அலியார் பைஸர், பொருளாளராக, எஸ்.எல். வை. அரபாத், உப தலைவர்களாக எம்.ஏ. பர்ஸான், ஏ.எம். றிஷாத், எஸ். எம். உபைத்தீன், உப செயலாளராக ஏ.எம். ஜப்றான், உப பொருளாளராக ஜே.ஏ. மஜித், கணக்கு பரிசோதகர்களாக எம். எம். றஜீப், ஐ. அஸ்பாக் ஆகியோர் சபையால் தெரிவு செய்யப்பட்டனர்.

புதுடெல்லி

## பறக்கும் விமானத்தில் மலம், சிறுநீர் கழிப்பு



பறக்கும் விமானத்தில் இருக்கையிலேயே மலம், சிறுநீர் உள்ளிட்ட இயற்கை உபாதைகளை கழித்து தகராறு செய்த நபரை புதுடெல்லி காவல்துறை கைது செய்துள்ளது.

ஜூன் 24ஆம் திகதியன்று ஏர் இந்தியாவின் AIC 866 விமானம் மகாராஷ்டிரா தலைநகர் மும்பையில் இருந்து புறப்பட்டு புதுடெல்லி சென்றது. இந்த விமானத்தில் ராம் சிங் என்ற பயணியும் சென்றுள்ளார். ஆப்ரிக்க நாடு ஒன்றில் சமையல்காரராக இவர் பணியாற்றி வருகிறார்.

இவர் அந்த ஏர் இந்தியா விமானத்தின் 17F இருக்கையில் அமர்ந்து சென்று வந்த நிலையில், விமானம் நடு வானில் பயணித்துக் கொண்டிருந்த போது பயணிகள் இருக்கைகள் இருக்கும் பகுதியிலேயே மலம், சிறுநீர் கழித்தார். அத்தோடு, எச்சில் துப்பி அருகே உள்ள நபர்கள் அருவருக்கும் வகையில் நடந்து கொண்டார். இவரின் செயல்களால் அதிர்ச்சி அடைந்த விமான ஊழியர்கள் சூப்பர்வைசருக்கு தகவல் கொடுத்தனர். அவர் உடனடியாக பயணிக்கு எச்சரிக்கை கொடுத்தார்.

அத்துடன் விமான கேப்டன் மற்றும் ஏர் இந்தியா நிர்வாகத்திற்கு தகவல் கொடுத்தார். புதுடெல்லியில் உள்ள இந்திரா காந்தி விமான நிலையித்தில் விமானம் தரையிறங்கும் போது காத்திருந்த பாதுகாப்பு அதிகாரிகள் பிரச்சனை செய்த பயணி ராம் சிங்கை கைது செய்தனர். அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 28 ஜூன் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.